<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 30/2019</u>

| | | |
|---|---|---|
| பெயர் | : தனஞ்செயன் | D.W.1. |
| த/பெ. | : ராமசாமி | |
| தேதி | : 19.07.2025 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

**1.** தாவா சொத்துகள் எனதுதகப்பனார் எழுதி வைத்த உயில் மூலம் எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்துகள் எனது அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துகளை பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் வாசாஆ 2 ஆனவும், பிவாசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தான செட்டில் மெண்ட் ஆவணத்தின் படி எனது மனைவி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

2. எனது மனைவி 3 ம்பிரதிவாதியிடம் தாவா சொத்தை பதிவு செய்யப்பட்ட பெந்தக கடன் பத்திரத்தை எழுதிக்கொடுத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டா எனது மனைவி பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது மனைவியின் பெயரில் உள்ள ஆவணத்தின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் தான் 3 ம் பிரதிவாதி எனது மனைவிக்கு கடன் கொடுத்தார் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கு எனது மனைவி கொடுக்க வேண்டிய கடன் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3. 3 ம் பிரதிவாதி என் மனைவியிடம் கடனை திருப்பி கேட்டதற்கு நானும் வாதியும் வஞ்சக கூட்டு சேர்ந்துகொண்டு 3 ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மனைவி வாங்கிய கடன் காலாவதி ஆக வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு எனது சகோதரரை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 30/2019**

பெயர் : தனஞ்செயன் D.W.1.

த/பெ. : ராமசாமி

தேதி : 19.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை: –**

**1.** நான் தற்போது எனது தரப்பில் எந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மனைவி பெயரில் உள்ள செட்டில் மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை எனது அண்ணன் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் நாராயணசாமி என்பவர் எனது உறவினர் என்றால் சரிதான். நாராயணசாமிக்கும் எனக்கும் இடையே சுமூக உறவு உள்ளது என்றால் சரியல்ல.

2. நாச்சிகட்டளை பாலகிருஷ்ணன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவரிடம் நான் எனது நிலங்களை விற்பனை செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிலங்களை அவர் சாகுபடி செய்து வருகிறார். அதில் பாலகிருஷ்ணன் அவரது பெயரில் வணிக பயன்பாட்டிற்கான மின்இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் வைத்துள்ள நிலங்கள் நஞ்சை நிலங்கள் என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் ஆகும். அந்த நிலங்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது.

3. பாலகிருஷ்ணன் என்பவர் சாகுபடி செய்து வரும் நிலங்களானது வாதி ரங்க பாஷியம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலம் எனது தகப்பனார் 1977 ம் ஆண்டு எழுதிவைத்த உயில் ஆவணத்தில் ரங்கபாஷியத்திற்கு ஒதுக்கபட்ட சொத்து என்றால் சரிதான். நான்மேற்படி சொத்தை பாலகிருஷ்ணனுக்கு பதிவு பத்திரம் செய்து கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அது ரங்கபாஷியத்தின் பெயரில் உள்ளது. எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டை ரங்கபாஷியம் எடுத்துக்கொண்டு அதற்காக எனக்கு மேற்படி நஞ்சை நிலங்களை கொடுத்தார். மேற்படி விபரங்களை எனது எதிர் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் மேற்படி விபரத்தை கூறி முதன்மை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

4. நான் மேற்படி விபரங்கள் எதையும் கூறி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவனையில் உள்ள 1 முதல் 5 அயிட்ட சொத்துகள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகள் எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா பி அட்டவனை சொத்தில் 1 முதல் 5 அயிட்ட சொத்துகள் வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், எனது அனுபவத்தில் இருந்து இருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. தாவா பி அட்டவனை சொத்தில் 1 முதல் 5 அயிட்ட சொத்திற்கு அருகாமையில் வாதிக்கும் மற்றும் எனது மற்ற உடன் பிறந்தவர்களுக்கும் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனக்கு மேற்படி சொத்தை தவிர வேறு சொத்துகள் அங்கு இல்லை என்றால் சரிதான்.

5. நான் ரங்கபாஷியத்தின் பெயரில் உள்ள சொத்தை பாலகிருஷ்ணன் என்பவருக்கு கொடுத்ததை தவிர ரங்க பாஷியத்தின் பெயரில் வேறு சொத்துகள் எதுவும் அங்கு இல்லை என்றால் சரிதான். அங்கு எனது பெயரில் சொத்துகள் உள்ளது என்றால் சரியல்ல. தாவா பி அட்டவனை 1 முதல் 5 அயிட்ட சொத்து எனக்கும் வாதிக்கும் ஏற்பட்ட வாய் மொழி பாக பரிவர்த்தனை படி வாதிக்கு என்னால் கொடுக்கபட்டு வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனக்கும் வாதிக்கும் எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் 6,7 வழக்குகள் உள்ளன. வாதியின் இடத்தில் நான் மண் திருடியதாக செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் மனைவி பெயர் தமிழ்ச்செல்வி என்றால் சரிதான். தமிழ்செல்வி பெயரில் உள்ள சொத்தில் BSNL டவர் உள்ளது என்றால் சரிதான். அதற்கான வாடகையை நான் வாங்கி கொள்வதாக கூறி தமிழ் செல்வி என்மீதும் BSNL நிறுவனத்தின் மீதும் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் தமிழ்ச்செல்விக்கு பணம் கொடுக்க வேண்டும் என உத்தரவு ஆகியுள்ளது என்றால் சரிதான். அதனை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்துள்ளேன். மேல் முறையீடு கோப்பில் எடுக்கபட்டு எண் கொடுக்கபட்டுள்ளதா என்றால் வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும்.

7. நான் பணம் கொடுக்க வேண்டி தமிழ்செல்வி சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நிறைவேற்று மனுவில் எனக்காக இந்த வழக்கில் ஆஜரான வழக்கறிஞர் தான் அந்த மனுவிலும் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் வாதியை ஏமாற்றும் எண்ணத்தில் தான் நானும், 2,3 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து ஆவணங்கள் தயார் செய்து மோசடி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.